**வெலிகம நகர சபை - 2022**

---------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகம நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிகம நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 731,816 இற்கான கடன்கொடுத்தோர் மீதி மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 98 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 475,470 தொகைக்கான அறிவித்தல் பலகைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பௌதீக ரீதியாக சபையில் காணப்படாத 06 வாகனங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 789,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து பெற்றிருந்த கடன்தொகை தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 762,718 இற்கான வட்டித் தொகைக்காக பலவின கடன்கொடுத்தோரின் கீழ் | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இருப்புக்களின் தேறிய பெறுமதி ரூபா 106,754 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,109,283 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சித் சேவை பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 9,389,427 இற்கான தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய டென்டர் கட்டணம் ரூபா 605,407 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய களியாட்ட வரி ரூபா 697,275 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 75,152,187 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 1,179,098 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணைகள், காலப் பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 29,972,622 தொகைக்கான 13 | பதிவேடுகள் நாளதுவரை ஆக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாமல் இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 22,120,182 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 30,991,088 தொகையாகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 15,300,000 | 12,384,551 | 12,089,483 | 12,740,641 | 15,300,000 | 11,449,284 | 8,776,948 | 12,445,573 |
| வாடகை | 22,576,000 | 22,544,981 | 19,830,187 | 20,917,259 | 9,385,000 | 16,178,843 | 15,241,318 | 18,202,465 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 8,463,000 | 5,427,875 | 5,641,995 | 336,459 | 8,762,500 | 3,192,330 | 3,246,330 | 550,579 |
| ஏனைய வருமானங்கள் | 17,494,000 | 12,741,299 | 13,200,373 | 848,893 | 17,250,000 | 11,120,084 | 10,295,003 | 1,307,967 |
| மொத்தம் | 63,833,000 | 53,098,706 | 50,762,038 | 34,843,252 | 50,697,500 | 41,940,541 | 37,559,599 | 32,506,584 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 12,536,056 தொகையாக காணப்பட்டதுடன், 9776 வீதவரி அலகுகள் தொடர்பாக ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 8,190,129 தொகையுடன் ரூபா 20,726,185 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 7,958,432 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு 5,536 வீத வரி அலகுகள் தொடர்பாக ரூபா 12,767,753 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | அந்த மீதியை குறைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 230 கடையறைகளில் 227 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அவற்றின் 129 வாடகை தாரர்களிடன் ரூபா 10,584,681 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் நகர சபைக்குச் சொந்தமான 14 இடங்களில் அமைந்துள்ள 41 கடையறைகள் உடன்படிக்கை மேற்கொள்ளாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | கடையறைகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடையறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வெலிகம நகர சபையின் 05 வர்த்தக தொடர் கட்டிடங்களுக்குரிய 06 கடையறைகள் தொடர்பாக கடை அறைகளை வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 857,032 தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படாத மற்றும் உடன்படிக்கை மேற் கொள்ளப்படாத கடையறைகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 24,852,325 தொகை பெற வேண்டியிருந்தது. | கடிதத்தின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | வெலிகம நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 28 ஹோட்டல்கள் | அனுமதிப்பத்திரம் செலுத்தப்படாத சில நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் | விரைவாக வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செய்யப்பட்டுள்ளது என. | |
| (எ) | சபைக்குச் சொந்தமான வெலிகம வாடி வீடு நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்படும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சாட்டப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,720,861 இற்கான நிலுவை முகாமைத்துவக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | தரப்பினருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | சபைக்குச் சொந்தமான வருடாந்தம் டெண்டர் செய்யப்படும் 09 ஆதனங்களில் இருந்து 2015 ஆண்டு முதல் 2022 இடைப்பட்ட காலப்பகுதி தொடர்பாக ரூபா 5,701,777 இற்கான நிலுவைத் தொகையொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான ஆலோசனைகள் வேண்டப்பட்டுள்ளது என. | விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையின் ஒத்துழைப்புடன் தனியார் நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட கொண்டாட்டம் ஒன்றின் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த களியாட்ட வரி ரூபா 697,275 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இணக்க சபைக்கு எழுத்துமூலம் வேண்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் களியாட்ட வரி தொடர்பாக கட்டுப்பாட்டு முறைமையொன்று கடைபிடிக்கப்பட வேண்டியதுடன் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆண்டில் மின்சாரம் வழங்களை இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கும் போது செலுத்த வேண்டியிருந்த தொகை என காட்டப்பட்டிருந்த ரூபா 1,884,306 தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்காக குழு ஒன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி பிரிவின் செயற்திட்டத்திற்காக 1995 ஆண்டின் போது 22 ஆண்டுகளில் தீர்க்கும் அடிப்படையில் வழங்கியிருந்த ரூபா 1,759,550 இற்கான கடன் தொகையினை தீர்க்கும் காலம் 2017 | விரிவான அட்டவணைகள் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது என. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் முடிவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | | |
| (இ) | முன்னைய ஆண்டின் பொருட் கணிப்பீட்டின் போது பற்றாக்குறை என இனங்கண்டிருந்த ரூபா 125,815 தொகை பெறுமதியான 15 வகையான பண்டங்களைச் சேர்ந்த 88 விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 760 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்ட பின்னர் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 09/2019 இலக்க 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 02(iv) பிரிவின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் உள்வருகை மற்றும் வெளிச் செல்கையை உறுதிப்படுத்தியிருக்காத 85 நாட்களுக்காக 04 உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 241,748 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அந்த காலப் பகுதியில் விடுமுறை நாட்களில் சேவையாற்றும் போது விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை என. | சுற்றறிக்கையின் பிரகாரம் செற்பட வேண்டும். |
| (உ) | தாபனக் கோவையின் அத்தியாயம் VIII பிரிவு 3.2 ஏற்பாடுகளுக்கு புறம்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழமையான கடமை நேரத்தில் மேற்கொள்ளக் கூடிய கருமங்களுக்காக மேலதிக நேர கொடுப்பனவு என ரூபா 2,020,597 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அவசர கடமை அலுவல்கள் நிறைவேற்றுவதற்கு நேரிட்டமையால் அநேகமான உத்தியோகத்தர்களுக்கு வழமையான கடமை நாட்களுக்கு மேலதிகமாக வார இறுதியிலும் கடமைகள் மேற் கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்த நேரிட்டது என. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 590 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 78 இற்காக இணக்கஞ் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர எல்லையினுள் அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமல் | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொண்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக 2021 நகர அதிகார சபையின் திட்டமங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளைகள்/ பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜுலை 08 திகதிய 2235/54 இலக்கங் கொண்ட வர்த்மானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணைக்கு இணங்க ரூபா 341,840 இற்கான கட்டணம் அறவீடு செய்து அந்த நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றிருந்த, சேவையை விட்டுச் சென்றிருந்த 07 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 687,658 இற்கான கடன் மீதியை அறவீடு செய்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் நிரந்தர சேவையில் உள்ள 07 வேலை வெளிக்கள தொழிலாளர்கள், சுகாதார தொழிலாளர் ஒருவர் மற்றும் தற்காலிக தொழிலாளர் ஒருவருக்கு அப் பதவிக்கு உரித்தில்லாத ஏனைய கடமைகள் சாட்டப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 5,554,815 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | சேவையின் தேவைப்பாட்டின் மீது கடமைகள் சாட்டப்பட்டுள்ளது என. | உரிய கடமைகள் சாட்டுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |